மாண்புமிகு திரு. க. அன்பழகன் : வேடிக்கையாக மாணவர்களை அப்படிச் சொல்லியிருக்கலாம். உண்மையில் சொல்லியிருக்க முடியாது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இந்த "செப்டம்பர்" ரகம் ஆண்டுக்கு எத்தனை தடவை வருகிறது ? எந்தத் திங்களில் ஆரம்பிக்கப்பட்டு எப்போது முடிகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த "செப்டம்பர்" 110 நாள் பயிர். பொதுவாக ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் பயிரிடப்படுகிறது. நலகிரி மலையில் இப்போது பயிராகிறது என்று கருதப்படுகிறது. இந்தப் புதிய முட்டைகோஸ் வேறெங்கும் பயிராகுமா என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

குழந்தைகள் நல்வாழ்வு இல்லம், தஞ்சாவூர்.

* 352 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தஞ்சாவூரிலுள்ள குழந்தைகள் நல்வாழ்வு இல்லத்திற்கு நவீன கட்டடம் கட்ட அரசு நிதி உதவி ஏதேனும் அளித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், விபரம் யாது ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை : (அ) தஞ்சையில் சமூக நலத்துறையின் மூலம் குழந்தைகள் நல்வாழ்வு இல்லம் ஏதும் நடக்கவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

School for Deaf and Dumb

*353 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state the number of Schools for Deaf and Dumb getting assistance from the Government in Kanyakumari district?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை : ஒன்று.